# சட்டமன்றத் தொகுதி - கள ஆய்வு!

வேலூர் தெற்கு மாவட்ட செயலாளர் ஏ.பி. நந்தகுமார் அறிவிப்பின்படி கழக செய்தி துறை தொடர்பு செயலாளர் **கான்ஸ்டன்டைன்ரவீந்திரன் எம்.பி** மற்றும் கழக சட்டத்துறை துணை செயலாளர் **இ.பரந்தாமன்** ஆகியோர் கீழ் கண்டவாறு கள ஆய்வு மேற்கொள்கின்றனர்.

**குடியாத்தம் சட்டமன்றத் தொகுதி** - 21.05.2026

| நகரம் / ஒன்றியம் / பேரூர் | நேரம் | இடம் |
|---|---|---|
| பேர்ணாம்பட்டு கிழக்கு ஒன்றியம் | காலை 10.00 மணி | சாந்தி ஜீவா மஹால், ஆம்பூர் சாலை, பக்காலப்பல்லி, பேர்ணாம்பட்டு. |
| பேர்ணாம்பட்டு மேற்கு ஒன்றியம் | | |
| பேர்ணாம்பட்டு தெற்கு ஒன்றியம் | | |
| பேர்ணாம்பட்டு நகரம் | | |
| குடியாத்தம் மேற்கு ஒன்றியம் | பிற்பகல் 3.00 மணி | ஹயக்கிரிவர் மஹால், புதிய பேருந்து நிலையம் எதிரில், குடியாத்தம். |
| குடியாத்தம் நகரம் | | |

**அணைக்கட்டு சட்டமன்ற தொகுதி** - 22.05.2026

| நகரம் / ஒன்றியம் / பேரூர் | நேரம் | இடம் |
|---|---|---|
| அணைக்கட்டு மேற்கு ஒன்றியம் | காலை 10.00 மணி | கலைஞர் அறிவாலயம் கெங்கநல்லூர், அணைக்கட்டு. |
| ஒடுக்கத்தூர் பேரூர் | | |
| பள்ளிகொண்டா பேரூர் | | |
| அணைக்கட்டு கிழக்கு ஒன்றியம் | | |
| அணைக்கட்டு மத்திய ஒன்றியம் | | |
| வேலூர் ஒன்றியம் | பிற்பகல் 3.00 மணி | வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க. அலுவலகம், வேலூர். |
| கணியம்பாடி தெற்கு ஒன்றியம் | | |
| பென்னாத்தூர் பேரூர் | | |
| அல்லாபுரம் பகுதி | | |
| தொரப்பாடி பகுதி | | |

**வேலூர் சட்டமன்ற தொகுதி** - 23.05.2026

| நகரம் / ஒன்றியம் / பேரூர் | நேரம் | இடம் |
|---|---|---|
| சத்துவாச்சாரி வடக்கு பகுதி | காலை 10.00 மணி | பேபி மஹால், புதிய மாநகராட்சி அலுவலகம் அருகில், வேலூர். |
| சத்துவாச்சாரி தெற்கு பகுதி | | |
| சைதாபேட்டை பகுதி | | |
| சலவன்பேட்டை பகுதி | | |
| வேலூர் ஒன்றியம் | | |
| வேலப்பாடி பகுதி | பிற்பகல் 3.00 மணி | |
| சங்கரன்பாளையம் பகுதி | | |
| தொரப்பாடி பகுதி | | |
| கஸ்பா பகுதி | | |
| சேண்பாக்கம் பகுதி | | |

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 18
20.05.2026

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க. செயற்குழுகூட்டம் ஜி.கே.மில்லேனியா ஓட்டலில் மாவட்ட அவைத்தலைவர் எ.கே.சுந்தரமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. இதில் இராணிப்பேட்டை மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் ஆர்.காந்தி கலந்து கொண்டு தமிழின தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் சிறப்பான முறையில் கொண்டாடுவது குறித்து பேசினார். இக்கூட்டத்தில் ஆர்.வினோத்காந்தி, துரைமஸ்தான் குமுதா குமார் ஆற்காடு ஜெ.எல்.ஈஸ்வரப்பன், சோளிங்கர் என்.ஜி.பார்த்திபன், ஜி.கே.குழுமம் சந்தோஷ் காந்தி மற்றும் தலைமை செயற்குழு. பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய பேரூர் செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், ஒன்றிய நகராட்சி பேரூராட்சி உள்ளாட்சி மன்ற நிர்வாகிகள். கலந்து கொண்டனர்.இறுதியாக மாவட்ட துனை செயலாளர் மு.சிவானந்தம் நன்றி கூறினார்.

# சட்டமன்றத் தொகுதி - கள ஆய்வு!

இராணிப்பேட்டை மாவட்டக் கழகச் செயலாளர் ஆர்.காந்தி அறிவிப்பின்படி கழக செய்தித்துறை தொடர்பு செயலாளர் **கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், எம்.பி.** மற்றும் கழக சட்டத்துறை துணை செயலாளர் **இ.பரந்தாமன்** ஆகியோர் கீழ்க்கண்டவாறு களஆய்வு மேற்கொள்கின்றனர்.

**சோளிங்கர் சட்டமன்றத் தொகுதி** - 25.05.2026

| நகரம் / ஒன்றியம் / பேரூர் | நேரம் | இடம் |
|---|---|---|
| சோளிங்கர் நகரம் | காலை 10.00 | MSV மஹால், சோளிங்கர் |
| சோளிங்கர் வடக்கு | | |
| சோளிங்கர் கிழக்கு | | |
| சோளிங்கர் மேற்கு | | |
| சோளிங்கர் மத்திய | | |
| காவேரிபாக்கம் தெற்கு | காலை 12.00 | வன்னியசத்திரம், காவேரிபாக்கம் |
| காவேரிபாக்கம் வடக்கு | | |
| காவேரிபாக்கம் பேரூர் | | |
| நெமிலி தெற்கு | மாலை 3.00 | வெங்கடேச பெருமாள் பார்ட்டி ஹால், ரெட்டிவலம் |
| நெமிலி வடக்கு | | |
| பனபாக்கம் பேரூர் | | |
| நெமிலி பேரூர் | | |

**அண்ணா அறிவாலயம்**
**சென்னை - 18**
**19.05.2026**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# செஞ்சி மஸ்தான் செஞ்சியில் வாக்காளர்களுக்கு நன்றி!

செஞ்சி, மே 21-

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி கிழக்கு ஒன்றியத்தில் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

செஞ்சி கிழக்கு ஒன்றியம் சிங்கவரம் ஊராட்சி உள்ளிட்ட பகுதிகளில் செஞ்சி ஒன்றிய பெருந் தலைவர் விஜயக்குமார் தலைமையில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு வாக்களித்த வாக்காளர்களுக்கு தனது நன்றியை தெரிவித்துக் கொண்டார்.

நிகழ்ச்சியில் மேல் மலையனூர் ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன், ஒன்றிய அவைத் தலைவர் வாசு, ஒன்றிய துணை செயலாளர் செல்வ மணி, மாவட்ட பிரதிநிதி குணசேகரன், ஒன்றிய கவுன்சிலர் ரவிச்சந்திரன், சிங்காரம் ஊராட்சி நிர்வாகிகள் முருகேசன், மணி வண்ணன், மாதேஸ்வரன், முன்னாள் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் பாண்டியன், அன்பு, செழியன், உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




புதுச்சேரியில் 'நீட்' தேர்வை ரத்து செய்யக் கோரி புதுவை மாநில தி.மு.க. அமைப்பாளர் இரா. சிவா தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### காரைக்குடி இராம. சுப்பையா
### மே 21 (1997)



**சுயமரியாதை இயக்கத் தொண்டர். கழகம் தொடங்கப்பட்ட நாளில் இருந்து உறுப்பினர். வைதீகக் கோட்டையான காரைக்குடிப் பகுதியில் திராவிட இயக்கத்தைப் பரப்பியவர்.**

**1953ஆம் ஆண்டு நடைபெற்ற கல்லக்குடிப் போராட்டத்தில் இரண்டாம் அணியின் தலைவராகப் பொறுப்பேற்று, இரயில் மறியல் செய்து, கைதாகி, தலைவர் கலைஞர் அவர்களுடன் திருச்சி சிறை புகுந்தவர்.**

**1972ஆம் ஆண்டு முதல் ஆறாண்டு காலம் தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் உறுப்பினராக பணியாற்றியவர்.**

**90 வயது வரை சுயமரியாதைக்காரராகவும், தி.மு.கழகத்தின் தொண்டராகவும் வாழ்ந்து மறைந்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

பத்திரிகையாளர் மீது கொடூரத் தாக்குதல்

# தமிழ்நாடு பிரஸ் அண்ட் மீடியா ரிப்போர்ட்டர் யூனியன் கண்டனம்!

## யூனியன் மாநில தலைவர் மு.சிவதமிழவன் கண்டன அறிக்கை!

திருவாரூர்,மே21-

தமிழ்நாட்டின் முதல்வராக ஜோசப்விஜய் அவர்கள் பதவியேற்று சில நாட்களுக்குள்ளாகவே, பத்திரிகையாளர் மீது நள்ளிரவில் நடைபெற்றிருக்கும் கொடூரதாக்குதல் மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளாதகவும் , ஜனநாயகத்தின் ஒரு தூணாக விளங்கும் பத்திரிகை மற்றும் ஊடக துறையினர் அச்சமின்றி பணியாற்றிட அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் தமிழ்நாடு பிரஸ் அண்ட் மீடியா ரிப்போர்ட்டர் யூனியன் மாநில தலைவர் மு.சிவ தமிழவன் கண்டன அறிக்கை வெளியிட்டுள்ளார்.

மாநில தலைவர் மு.சிவ தமிழவன் தமது அறிக்கையில் கூறி இருப்பதாவது,


திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டையில் தனியார் தொலைக்காட்சி செய்தியாளர் ஹாஜா முகைதீன் என்பவரை, நள்ளிரவில் ரவுடி கும்பலை சேர்ந்த மூவர் வீடுபுகுந்து தாக்குதல் நடத்தி இருப்பது கண்டனத்திற்குறியது. தாக்குதலில் பாதிக்கப்பட்ட செய்தியாளர் தஞ்சை மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

உயிருக்கு போராடும் வகையில் தாக்கி காயப்படுத்திய ரவுடி கும்பலை கைது செய்ய கடும் நடவடிக்கை எடுக்க தமிழக முதலைமைச்சர் ஜோசப் விஜய் அவர்கள் திருவாரூர் மாவட்ட காவல்துறைக்கு உத்தரவிடவேண்டும் , சிகிச்சையில் இருக்கும் செய்தியாளருக்கு சிறப்பு சிகிச்சை அளிக்க அரசு ஏற்பாடுகள் செய்ய வேண்டும் . மேலும் பத்திரிகை மற்றும் ஊடக துறையினர் வரும் காலங்களில் அச்சமின்றி பணியாற்றிட அரசு தேவையான நடவடிக்கைகளை உடனடியாக சட்டப்படி மேற் கொள்ள வேண்டும். இந்த கொடூர தாக்குதலுக்கு உரிய நியாயம் கிடைக்க தவறும்பட்சத்தில் எங்கள் யூனியன் சார்பில் போராட்டங்கள் நடத்தவும் தயாராக உள்ளோம்.

இவ்வாறு தமிழ்நாடு பிரஸ் அண்ட் மீடியா ரிப்போர்ட்டர் யூனியன் மாநில தலைவர் மு.சிவதமிழவன் அவர்கள் தமது அறிக்கையில் கூறி இருக்கிறார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆ. நெடுஞ்செழியன்
### மே 21 (2001)



**சேலம் மாவட்டக் கழகச் செயலாளர் வீரபாண்டி ஆறுமுகம் அவர்களின் மூத்த மகனான இவர், சேலம் நகர இளைஞர் அணி அமைப்பாளர் உள்ளிட்ட பல்வேறு பொறுப்புகளில் திறம்பட பணியாற்றி, மறைவெய்தியபோது சேலம் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளராக பணியாற்றியவர்.**

**சேலம் மாவட்ட ஊராட்சித் தலைவர், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர், மாவட்ட பால்வள இயக்குநர் ஆகிய பொறுப்புக்களை வகித்தவர்.**

**கழகம் எதிர்க்கட்சியாக இருந்த காலங்களில் நடைபெற்ற போராட்டங்கள் பலவற்றிலும் முன்னணியில் நின்று கழகத்தினரை வழிநடத்தி, அவர்களுடன் சிறை சென்றவர்.**

**"கழகக் காளை ஆ.நெடுஞ்செழியன் மறைந்துவிட்டார் என்ற இடி போன்ற செய்தியினைக் கேட்டு என்னைத் தேற்றிக் கொள்ள இயலாமல், என் தம்பியையும் தேற்றிட இயலாமல் தவிக்கிறேன். தம்பி செழியா, என்றும் வாழும் உன் புகழ்!" என்று தலைவர் கலைஞர் அவர்கள் தனது இரங்கலில் தெரிவித்துள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**